# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **43/2016**

ஆணை எண். **98/2016**

நாள் : **25/05/2016**

**திரு. சி. வெங்கடாசலம்,**
**14, பெரியார் நகர்,**
**அடுக்குமாடி குடியிருப்பு,**
**ஈரோடு – 638 001.** — **முறையீட்டு மனுதாரர்**

**மேயர் / துணை மேயர் /**
**3 வது மண்டல தலைவர்,**
**ஈரோடு மாநகராட்சி,**
**ஈரோடு.** — **எதிர் மனுதாரர்**

அரசின் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை மூலமாக, ஈரோடு நகராட்சி, 14, பெரியார் நகர் முகவரியில் வசிக்கும் திரு. சி. வெங்கடாசலம் என்பவரின் முறையீட்டு மனு **27.01.2016** அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு **043/2016** எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆணை

ஈரோடு மாநகராட்சி, 14, பெரியார் நகர், அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் திரு. சி. வெங்கடாசலம் என்பவர் மேற்படி மாநகராட்சியில் மேயர், துணை மேயர் மற்றும் 3வது மண்டலத் தலைவர் ஆகியோர் வெள்ளம் பாதித்த மக்களுக்கு எந்தவித நிவாரணமும் வழங்காமலும், மாநகராட்சிப் பணிகள் எதுவும் செய்யாமலும் அனைத்து வகையான சமூக விரோத செயல்களிலும் மக்கள் மனம் புண்படும் வகையில் இன்பச் சுற்றுலா சென்றுள்ளனர் என தெரிவித்துள்ள புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் அரசுத் துறை மூலம் பெறப்பட்டது. மேற்படி புகார் சம்பந்தமாக ஈரோடு மாநகராட்சி ஆணையரின் அறிக்கைப் பெறப்பட்டது. தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியின் மீது புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டு புகார் சம்பந்தமான விரிவான அறிக்கையை மாநகராட்சி ஆணையர் சமர்ப்பித்துள்ளார்.

மழையினால் பாதிக்கப்பட்ட ஈரோடு மாநகராட்சி எல்லைக்குட்பட்ட குடிசைப் பகுதிகளில் இருந்த மக்களை திருமண மண்டபம், சமுதாய நலக்கூடங்கள் (ம) பள்ளிகளில் தங்கவைத்து தேவையான உணவுப் பொருட்கள் வழங்கி மக்களைப் பாதுகாத்து வெள்ள நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். தொற்றுநோய்கள் பரவாத வாறு தடுப்பூசிகள் போடப்பட்டன என்றும் அனைத்து நிவாரணப் பணிகளும் மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் 3 வது மண்டலத் தலைவர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர் அவர் குறிப்பிட்டுள்ள முகவரியில் இல்லை என்றும் போலியான முகவரியில் தவறான புகாரை அளித்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மனுதாரருக்கு இம்முறைமன்ற நடுவம் மூலம் அனுப்பப்பட்ட விசாரணைக்கான அழைப்பாணையும் பெறப்படாமல் திரும்பப் பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் புகார்மனு போலியான முகவரியிலிருந்து எழுதப்பட்டதாக உறுதி செய்யப்பட்டது. எனவே, புகார்மனுவில் புகார்கள் குறித்து மாநகராட்சி ஆணையர் அறிக்கையை இம்முறைமன்ற நடுவம் ஏற்றுக்கொள்கின்றது. இந்நிலையில் முறையீட்டு மனு மீது மேல் நடவடிக்கை ஏதும் தேவையில்லை என முடிவு செய்து இம்முறைமன்றம் அவ்வாறே ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பெறுநர்

மாநகராட்சி ஆணையர்,
ஈரோடு மாநகராட்சி, ஈரோடு.
**(மாநகராட்சி மேயர், துணை மேயர் (ம) மண்டலத் தலைவர் ஆகியோரின் பார்வைக்கு வைக்க ஆணையிடப்படுகிறது.**

**நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,**
**சென்னை – 9**
**(கடித எண்.733 / 2016, நாள் 13.01.2016 சம்பந்தமாக)**

/உண்மை நகல்/

செயலாளருக்காக.